# “கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி - 150”

இணைய வழிப் பன்னாட்டுத் தொடர்க் கருத்தரங்கம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் - 613010

இணைய வழிப் பன்னாட்டுக் கருத்தரங்கம்

# “கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி - 150”

**வ.உ.சி என்றழைக்கப்படும் வள்ளியப்பன் உலகநாதன் சிதம்பரம் பிள்ளை** 1872ஆம் ஆண்டு செப்டம்பர்த் திங்கள் 5-ஆம் நாள் தூத்துக்குடி மாவட்டம் ஒட்டப்பிடாரம் என்ற ஊரில் உலகநாத பிள்ளை, பரமாயி அம்மாள் தம்பதியருக்கு மூத்த மகனாகப் பிறந்தவர்.

சட்டக் கல்வி பயின்று வழக்கறிஞர் பணி செய்த இவர் இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குகொண்டு, ஆங்கிலேயர்களின் அடக்குமுறையை எதிர்த்துப் போராடினார். அவர்களின் கொடூரமான சட்டங்களை எதிர்த்ததோடு, மக்களிடையே விடுதலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தினார். இதனால் ஆங்கிலேய அரசு இவரைச் சிறையிலிட்டு செக்கிழுக்க வைத்தது.

இவரது செயல்பாடுகள் பன்முகத் தன்மை கொண்டவையாக விளங்குகின்றன. வழக்கறிஞர், எழுத்தாளர், பேச்சாளர், தொழிற்சங்கத் தலைவர், சுதந்திரப் போராட்ட வீரர், பதிப்பாசிரியர், உரையாசிரியர், மொழிபெயர்ப்பாளர், படைப்பாளர், இதழியலாளர், சுதேசியச் சிந்தனையாளர் எனப் பலநிலைகளில் ஆளுமை மிக்கவராகத் திகழ்ந்திருக்கிறார்.

சுதேசி பிரச்சார சபை, தர்ம சங்க நெசவு சாலை, தூத்துக்குடி கைத்தொழில் சங்கம், சுதேசிய பண்டக சாலை, வேளாண் சங்கம், சுதேசிய நாவாய் சங்கம் முதலியன இவர் ஏற்படுத்திய பல்வகை அமைப்புகளாகும்.

பாலகங்காதர திலகரை முன்னோடியாகக் கொண்ட இவர் பாரதியார், சுப்பிரமணிய சிவா, அரவிந்தர் முதலிய சமூக எழுச்சி ஆளுமைகளுடன் நெருங்கிய தொடர்பில் இருந்து செயல்பட்டவர்.

இவ்வாறான பன்முகத் திறன் வாய்ந்த வ.உ.சியின் 150வது பிறந்த ஆண்டினைச் சிறப்பிக்கும் நோக்கில் தமிழக அரசின் முன்னெடுப்பில் இணைய வழியல் நடத்தப்படும் பன்னாட்டுக் கருத்தரங்கம் **“கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி 150”** என்ற தலைப்பில் அமையும்.

## கருத்தரங்க நிகழ்வுத் திட்டம்

இணைய வழியில் 30 அமர்வுகள் (30 நாட்கள்) என ஒவ்வொரு நாளும் மாலை 6 மணியிலிருந்து 7.30 வரை Cisco Webex செயலியின் வழியாக நடைபெறும். ஒவ்வொரு அமர்வும் கருத்துரை மற்றும் கலந்துரையாடல் என்ற நிலையில் அமையும். வல்லுநரின் கருத்துரைகள் தொகுக்கப்பட்டு பின்னர் நூலாக்கம் செய்யப்படும். வல்லுநர்கள் உலகளாவிய நிலையில் உரிய குழுக்களால் தெரிவு செய்யப்படுவர்.

தொடக்க விழா, நிறைவு விழாக்களில் தமிழக முதலமைச்சர் மற்றும் துறை அமைச்சர்கள் பங்கேற்கவும் உலகளாவிய சிறப்பு அழைப்பாளர்கள் பேருரையாற்றும் வகையிலும் கருத்தரங்க நிகழ்வுகள் ஒருங்கிணைக்கப்படும்.

கருத்தரங்க நிகழ்வுகள் Youtube நேரடி இணைய தளத்தில் ஒளிபரப்பப்படும். பதிவு செய்யப்பட்ட கருத்தரங்க நிகழ்வுகள் தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தளத்திலும் பதிவேற்றம் செய்யப்படும்.

## கருத்தரங்கப் பொருண்மைகள்

1. வ. உ. சி. யின் வாழ்க்கை வரலாறு
2. விடுதலைப் போராட்ட வரலாறு
3. தொழிலாளர் உரிமைப் போராட்டங்கள்
4. வ. உ. சி. யும் தொழிற்சங்கங்களும்
5. வ. உ.சி. தொடங்கிய அமைப்புகளும் அதன் நோக்கங்களும்
6. சுதேசிக் கப்பலோட்டிய வரலாறு
7. வழக்கறிஞர் பணி
8. சிறை வாழ்வும் போராட்டமும்
9. வ. உ. சி. யின் படைப்புகள்
10. பதிப்பித்த நூல்களும் பதிப்புத் திறன்களும்
11. உரையெழுதிய நூல்களும் உரைத்திறன்களும்
12. மொழிப்பெயர்ப்பு நூல்களும் மொழிபெயர்ப்புத் திறன்களும்
13. வ. உ.சி. – சொற்பொழிவுகள்
14. வ. உ.சி. யின் சமுதாயப் பங்களிப்புகள்
15. வ. உ. சி. யும் சமூக நல்லிணக்கமும்

16. அறிஞர்கள் பார்வையில் வ.உ.சி.
17. வ. உ.சி - வரலாற்று அடையாளங்கள்
18. ஒப்பியல் நோக்கில் வ.உ.சி. யும் சமகால இந்தியச் சூழலும்
19. வ. உ. சி. யும் உலகச் சிந்தனை மரபும்
20. வ. உ. சி. யும் அவரது கட்டுரைகளும்
21. வ. உ. சி. யின் தத்துவச் சிந்தனைகள்
22. காலனிய எதிர்ப்புச் சிந்தனைகள்
23. வ. உ. சி. யின் போராட்ட வடிவங்கள்
24. வ. உ. சி. குறித்த வழக்குகளும் தீர்ப்புகளும்
25. உலகப் பார்வையில் வ. உ.சி.
26. தேசியப் பார்வையில் வ. உ. சி.
27. தமிழகப் பார்வையில் வ. உ. சி.
28. வ.உ.சி. யின் இதழியல் பங்களிப்பு
29. வ.உ.சி. யின் மொழிப்பற்றும் மொழி ஆளுமையும்
30. வ.உ.சி. யும் அவர்கால ஆளுமைகளும்
31. காலனிய கப்பல் வணிகமும் வ.உ.சி.யின் சுதேசிக் கப்பலும்
32. வ.உ.சி.யின் அடையாளங்களும் ஆவணச் சின்னங்களும்

இவை போன்ற பிற பொருண்மைகளை உள்ளடக்கியதாக இக் கருத்தரங்கப் பொருண்மை அமையும்.